பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஸ்ரீ மார்கழி மீ 01 உ. ஞாயிற்றுக்கிழமை (16-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 20

# நாரந்தனை, வட்டுக்கோட்டையில் நேற்றுமாலை விமான குண்டுவீச்சு!

## நாடாளுமன்றத்தில் நடந்த கைகலப்பு!

லண்டன், டிச. 16

இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று பெரும் கைகலப்பு ஏற்பட்டதாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பிரேரணை அங்கீகரிக்கப்படுவதை சில எதிர்க்கட்சியினர் தடுக்க முயன்றபோது இந்தக் கைகலப்பு ஏற்பட்டது.

அதனை அடுத்து வாக்கெடுப்பை நாளை திங்கள் வரை ஒத்தி வைப்பது என முடிவு செய்யப்பட்டது. [உ-5]

## வவுனியா பகுதியிலும் நேற்று ஹெலித் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிச.16

வவுனியா, நொச்சிமோட்டையில் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஹெலி நடத்திய கலிபர் தாக்குதலில் சிலர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த புஷ்பராசா [35 வயது] என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதலின் போது பஸ்ஒன்றும் சேதமடைந்ததாகத் தெரியவருகிறது. [ஓ-15-5]

## உணவுப் பொருள்களை தரை மூலம் கொண்டுவரும் கட்டாய நிலை உருவாகிறது

யாழ்ப்பாணம், டிச. 16

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து உணவுப் பொருள்களை இறக்குவது மேலும் கஷ்டம் நிறைந்த காரியமாகி வருகிறது.

கடல் கொந்தளிப்பு இன்னும் ஆகக் குறைந்தது மூன்று வாரங்களுக்காவது தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை மாற்றுவழி ஒன்றின் மூலம் தருவிக்க

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ஈழத் தமிழ் இளைஞர்கள் தமிழகத்தில் நேற்றும் கைது

சென்னை, டிச. 16

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்களைச் சேர்ந்த 86 பேர் இரண்டாவது நாளாக நேற்றும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

ஈ. பி. ஆர். எல். எவ். 29 பேர், ஈ.என். டி.எல். 22பேர், புளொட் 18பேர், ஈரோஸ் ஒருவர், ரெலோ 16பேர் [இரு பிரிவுகள்] ஆகியோரே நேற்றுக்கைது செய்யப்பட்டனர்.

சென்னை, செங்கை அண்ணா, திருச்சி, சேலம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பொலீஸார் நடத்திய திடீர்ச் சோதனையின்போது இவர்கள் பிடிபட்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## போராளிகள் கைது குறித்து கலைஞரின் வியாக்கியானம்

சென்னை, டிச.16

ஈழத் தமிழ்ப் போராளிகள் கைது செய்யப்படவில்லை. ஆனால் அவர்கள் சுற்றிவளைக்கப்பட்டு பயணிகள் விடுதிகளிலும், பொலீஸ் பயிற்சி மாணவர் விடுதிகளிலும் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்று செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

ஈழத் தமிழ்ப் போராளிகள் மீது தற்போது எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை தொடரும்.

போராளிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக, மத்திய அரசுடன் மாநில அரசு நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## தபால்கள் நேற்றே விநியோகம்

யாழ்ப்பாணம், டிச 16

கப்பலில் வந்து சேர்ந்த தபால் பொதிகள் யாழ் பிரதம தபாலகத்தினால் தரம் பிரிக்கப்பட்டு, நேற்று அந்தந்தத் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

யாழ். நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று தபால் விநியோகமும் இடம்பெற்றது. ஏனைய தபால்கள் திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-6]

## தண்ணீரூற்றில் கலிபர் தாக்கு

யாழ்ப்பாணம், டிச. 16

முல்லைத்தீவு, தண்ணீரூற்றுப் பகுதியில் நேற்று ஹெலி நடத்திய கலிபர் தாக்குதலில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர் பலத்த காயமுற்றார்.

காயமடைந்த அருந்தவராசா யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். வேறு சிலரும் இச்சம்பவத்தில் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ 15-5]

## பரந்தனில் நேற்றும் ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், டிச,16

பரந்தன் பகுதியில் நேற்றும் ஹெலி தாக்குதல் நடத்தியது. சிலர் காயமடைந்தனர்.

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சுபேஸ்கரன் [21 வயது], திருமதி தவமணி [48 வயது] காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். (ஓ-5)

## பாக். வேண்டுகோள்; இந்தியா நிராகரிப்பு

புதுடில்லி, டிச, 16

இம்மாத இறுதியில் நடைபெற இருக்கும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியை ஒத்திவைக்கும்படி பாகிஸ்தான் விடுத்த வேண்டுகோளை இந்தியா நிராகரித்து விட்டது.

இந்தியாவில் தற்போது இடம்பெற்றுவரும் இந்து-முஸ்லிம் கலவரங்களைக் காரணம் காட்டி, ஆசிய கிண்ணப் போட்டியை காலவரையறை இன்றி ஒத்தி வைக்கும்படி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரி இருந்தது. (ஓ-எ)

## 250 பேர் உயிரிழப்பு

புதுடில்லி, டிச.16

இந்தியாவில் கடந்த ஆறாம் திகதி முதல் இடம்பெற்று வரும் இந்து- முஸ்லிம் கலவரங்களில் [illegible] எண்ணிக்கை [illegible] கரித்துள்ளது. [ஓ-எ]

## வயோதிப மாது பலி; சிலர் படுகாயம்

யாழ்ப்பாணம், டிச. 16

**நாரந்தனை மற்றும் வட்டுக்கோட்டைப் பகுதிகளில் நேற்று மாலை விமானக் குண்டு வீச்சுகள் இடம் பெற்றன. இந்தத் தாக்குதல்களில் வயோதிப மாது ஒருவர் பலியானார். மற்றும் சிலர் காயமுற்றனர்.**

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்றுக்காலை இரண்டு ஹெலிக்கொப்டர்கள் வட்டமிட்டு நோட்டமிட்டன.

அதனைத் தொடர்ந்து மாலை 5 மணியளவில் விமானக் குண்டு வீச்சு இடம் பெற்றது.

இரண்டு பொம்மர்கள் அடுத்தடுத்து இரண்டு குண்டுகளை வீசின.

வட்டுக்கோட்டை மாவடியில், அடைக்கலம் தோட்டம் கந்தசாமிகோயிலுக்குஅருகில் உள்ள ஒழுங்கைக்கு அண்மித்ததாக குண்டுகள் வீசப்பட்டன.

இந்தக் குண்டு வீச்சில் ஒரு வீடு சேதமுற்றது.

இந்தக் தாக்குதலினால் வீதியால் சென்று கொண்டிருந்த ரி. சிவகுமாரி [வயது 22] என்ற இளம் பெண் காலில் படுகாயமுற்றார். அவர் தற்போது யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## செஞ்சிலுவைக் கொடியுடனும் மருந்து கொண்டுவர முடியாது!

### யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு நேர்ந்துள்ள அவலம்!!

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரிக்குத் தேவையான மருந்து வகைகளை செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் கொடியுடன் கொண்டு வருவதற்கும் அரசு அனுமதி மறுத்துள்ளதாக அறியப்படுகிறது.

இதனால் கப்பல் மூலம் கொண்டு வரப்படும் மருந்து வகைகளுடனேயே ஆஸ்பத்திரி நோயாளரைச் சமாளிக்க வேண்டியுள்ளது. ஆனால் கப்பல் மூலம் வரும் மருந்துகள் குறைந்த பட்சத் தேவைக்குக்கூடப் போதாது

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியின் பாதுகாப்பை செ. ச. சர்வதேசக் குழு ஏற்றுள்ளது. அரசாங்கமும் சம்மதம் தெரிவித்ததன் பேரிலேயே செ. ச. ச. குழு ஆஸ்பத்திரியின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது!

ஆனால் ஆஸ்பத்திரிக்குத் தேவையான மருந்து வகைகளை செ. ச. சர்வதேசக் குழுக் கொடியுடன் கொண்டு வர அரசு அனுமதிக்காதிருப்பது தமிழ்ப் பகுதிகளில் மக்களை நோயாளிகளாக வைத்துச் சாகடிப்பதற்குத்தான் என்று சமூக நலன் விரும்பிகள் பலரும் கவலை தெரிவிக்கின்றனர். [அ]

## டில்லிக்கு கட்டளையிடும் காலம் முடிந்து விட்டது!

### தமிழகத்துக்கு பிரதமர் எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 16

சென்னையில் இருந்து மத்திய அரசுக்கு கட்டளைகள் அனுப்பப்பட்ட காலம் முடிந்து விட்டது. முக்கியமான தேசிய பிரச்சினைகளில் மத்திய அரசின் ஆலோசனையின்படியே இனி தமிழக அரசு செயற்பட வேண்டும்.

பிரதமர் சந்திரசேகர் உத்தர பிரதேசம் தலைநகர் லக்னோவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

[2 ஆம் பக்கம் பார்க்க]

## பொம்மர், அவ்ரோ, ஹெலி கிளிநொச்சியில் தாக்குதல்!

கிளிநொச்சி, டிச. 16

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை பொம்மர்கள், அவ்ரோ, ஹெலி என்பன தாக்குதல்களை நடத்தின.

கிளிநொச்சி சந்தைப்பகுதி, டிப்போச் சந்தி, உருத்திரபுரம், இரணைமடுப்பகுதி, பரந்தன் சந்திப் பகுதிகளில் குடியிருப்பு பகுதிகள் மீது இலக்கு ஏதுமின்றி ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது.

இரணைமடுச் சந்திப் பகுதியில் ஹெலி நடத்திய தாக்குதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

தர்மபுரம் பகுதியில் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கின. தென்னந் தோட்டத்தில் குண்டுகள்வீசப்பட்டதில் பல மரங்கள் கருகியும், முறிந்தும் நாசமாகின.

நேற்று முன்தினம் நடந்த தாக்குதல்களில் காயமடைந்த சிலர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது பற்றிய செய்தி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே. [ஒ-76]

## சுண்டிக்குளத்திலும் குண்டு!

சுண்டிக்குளம் பகுதியிலும் நேற்று முன்தினம் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் [illegible]

இப்பகுதியில் 8 குண்டுகள் வீசப்பட்டதாகவும், கடற்கரைப்பகுதியில் குண்டுகள் விழுந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

குண்டுவீச்சினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. [ஓ]

## கம்பளையில் பஸ் விபத்தில் 10 பேர் பலி

கொழும்பு, டிச. 16

அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்று பள்ளத்தாக்கில் புரண்டதால் பத்துப் பேர் மரணமானார்கள் 25 பேர் படுகாயமுற்றனர்.

கம்பளை மாவட்டத்தில் உள்ள தெல்பிட்டியாவில் கடந்த வியாழக்கிழமைஇந்த விபத்து இடம்பெற்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 ஆம், 2 ஆம் தர அதிபர் தெரிவு

# பரீட்சை புள்ளி விவரங்களை வெளியிடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 15
அண்மையில் நடைபெற்ற 1 ஆம், 2 ஆம் அதிபர் தெரிவில் சில அநீதிகள் நடைபெற்றதாக ஆசிரியர் மத்தியில் ஓர் அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. இது பற்றி எமது சங்கத்திற்கும் சில முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பரீட்சை மூலம் தெரிவு செய்யும் இம்முறையை எமது சங்கம் வரவேற்கும் அதே வேளையில் எழுத்துப் பரீட்சையில் பெறப்படும் புள்ளி விவரங்களைப் பகிரங்கப்படுத்தும் படியும் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு வடமாகாண ஆசிரியர் சங்கம் கல்விச் சேவை ஆணைக்குழுவிடம் கோரி உள்ளது.

இலங்கை நிர்வாக சேவை போன்ற தெரிவுப் பரீட்சைகளில் பெறப்படும் புள்ளிகள் பகிரங்கப்படுத்தப் படுகின்றன. எனவே, அதிபர் தெரிவில் ஆசிரியர்கள் பெற்ற புள்ளிகளையும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துகிறோம். இதன் மூலம் வழங்கப்பட்ட நியாயத்தை ஆசிரியர் உலகம் அறிந்து கொள்ள வாய்ப்பு உண்டாகும்.

தற்போது வடமாநிலத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக 3 ஆம் தர அதிபர் நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுக்க முடியாத ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சையை பிரதேசக்கல்வி அலுவலகத்தில் நடத்தும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி மேலும் கோரப்பட்டுள்ளது. [இ]

# இளிநொச்சி மக்களுக்கு வெள்ளி என்றால் பதற்றம்!

கிளிநொச்சி மக்களுக்கு வெள்ளிக்கிழமை என்றால் ஒரே பயம், பீதி, பதற்றம்!

கடந்த சில வாரங்களாக வெள்ளிக்கிழமை தோறும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதே இதற்குக் காரணமாகும்.

கடந்த 30 ஆம் திகதி [வெள்ளி] வட்டக்கச்சியிலும், 7 ஆம் திகதி [வெள்ளி] புளியம்பொக்கணையிலும் நேற்று முன்தினம் [வெள்ளி] கிளிநொச்சி, உருத்திரபுரம், தர்மபுரம், பரந்தன் பகுதிகளிலும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன என்பது தெரிந்ததே. [ஓ-76]

# ராணுவ சீருடையில் சென்று கொள்ளையிடும் சிப்பாய்கள்

கொழும்பு, டிச. 16
இராணுவத்தில் கடமை புரியும் சிப்பாய்களும், அதனை விட்டு விலகிய முன்னாள் சிப்பாய்களும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குளியாப்பிட்டிப் பகுதியில் தோட்ட சுப்ரிண்டென்ட் ஒருவருடைய வாசஸ்தலத்தில் நடந்த கொள்ளை குறித்து பொலீஸார் விசாரித்ததில்—

அப்பகுதியில் பல கொள்ளைகளை நடத்திய ஒரு கோஷ்டி குறித்துத் தகவல் கிடைத்தது. அந்தக் கொள்ளைக் கோஷ்டிக்கு கொழும்பில் பணிபுரியும் சிப்பாய் ஒருவரே தலைமை வகிக்கிறார் என்று கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தக் கோஷ்டியினர் இராணுவ உடை அணிந்து, தாம் தேசப்பிரேமி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு பல கொள்ளைகளை நடத்தியிருக்கின்றனர்.

கொழும்பு புறக்கோட்டையில் பல வர்த்தகர்களிடமும் நகரில் உள்ள செல்வந்தர்களிடமும் கொள்ளை அடித்த ஒரு கோஷ்டிக்கு முன்னாள் இராணுவச் சிப்பாயே தலைவர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கோஷ்டி கொழும்பில் உள்ள பிரபல ''புக்கி'' முதலாளியிடமும் கொள்ளையடித்துள்ளது. [அ]

## இடம்பெயர்ந்தோர் நலன் கருதி

# நிவாரணம் வழங்குவதற்கு தற்காலிக கூ.ச. கிளைகள்

மல்லாகம், டிச. 16
வலிகாமம் வடக்கு மக்கள் தாம் இடம் பெயர்ந்துள்ள இடங்களில் நிவாரணப் பொருள்களைச் சீராகவும் ஒழுங்காகவும் பெற முடியவில்லை.

அவர்கள் தஞ்சம் புகுந்துள்ள பகுதிகளில் நிரந்தரமாக வாழ்பவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்ட பின்னரே இடம் பெயர்ந்தோருக்கு வழங்கப்படுகிறது.

ஆகையால் வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்துள்ள பகுதிகளில் அவர்கள் நலன்களைக் கவனிக்க வென்று கூட்டுறவுச் சங்கக் கிளைகள் தற்காலிகமாக நிறுவப்பட வேண்டும்.

வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோரின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக கடந்த வெள்ளிக்கிழமை சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடந்த கூட்டத்தில் இவ்வாறு முடிவுசெய்யப்பட்டது.

பிரஸ்தாப கூட்டத்திற்கு தெல்லிப்பழை ப.நோ.கூ.ச. தலைவர் திரு. எஸ். சிவமகராசா தலைமை வகித்தார்.

இராணுவத்தினரிடம் அகப்பட்டு துன்பப்படும் வலி. வடக்கு மக்களை மீட்பதற்கு பொருத்தமான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கப்பட்ட விடயங்கள் மகஜர் வடிவத்தில் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-86)

### தரைமூலம்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
வேண்டிய அவசியம் தோன்றி உள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டு வருவதில் தொடர்ந்து கஷ்டம் இருப்பதனால், தரை மார்க்கமாகக் கொண்டு வரமுடியுமா, அதற்கான சாத்தியங்கள் உண்டா என்பது குறித்து அந்த வட்டாரங்கள் தொடர்புடைய சாராருடன் ஆலோசனை நடத்தியுள்ளன.

தரைமார்க்கமாக உணவுப் பொருள்களைக் கொண்டு வர வேண்டிய கட்டாய -அவசரம்- ஏற்பட்டால் எந்தப் பாதை மூலம் கொண்டு வரலாம் என்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. ஆனால் தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. [அ-6]

### ஈழத் தமிழ்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
டனர்.

இதேவேளை —
நேற்று முன்தினமும் சென்னை, திருச்சி, மதுரை உட்பட்ட சில இடங்களில் இயக்கம் ஒன்றைச் சேர்ந்த தமிழ்ப் போராளிகள் 81 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் அறுவர் திருச்சி தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர். [ஒ-எ]

### போராளிகள்.,

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

போராளிகள் எந்த ஆயுதங்களையும் இலங்கைக்கு எடுத்துச் செல்லவில்லை என்றும் திரு [illegible] டமாகத் தெரிவித்தார். [ஒ-எ]

# ஜனவரி முதல் எரிபொருள் விலை குறைப்பு

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பெற்றோலியப் பொருள்களின் விலைகளை குறைக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 35 ரூபாவில் இருந்து 30 ரூபாவாகவும்—

ஒரு லீற்றர் டீசலின் விலை 13 ரூபாவில் இருந்து 11 ரூபாவாகவும் குறைக்கப்படும் என்று அரசு விடுத்த அறிக்கை [illegible] விக்கப்பட்டுள்ளது. [உ-எ]

# அகதிகளுக்கு உடு புடைவை சத்துணவு எடுத்துவர முயற்சி

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதிகளுக்கு தேவையான உடுபுடைவைகள், சத்துணவு, மருந்து ஆகியவற்றை அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் கொழும்பில் இருந்து கொண்டுவர இருக்கின்றது.

இதுவரை இந்த ஒன்றியம் உணவுப் பொருள்களையே கொழும்பில் இருந்து கொண்டு வந்தது.

அகதி முகாம்களுக்கு உணவு வழங்கும் வேலையை செயலகம் பொறுப்பேற்றுள்ளதைஅடுத்து, இந்தஒன்றியத்தினால்உடுபுடைவைகள், புத்தகம் கொப்பிகள், மருந்து வகைகள், திரிபோசா போன்ற சத்துணவுகள் கொண்டுவரப்பட உள்ளன. (இ-3)

# நாரந்தனை, வட்டுக்கோட்டை....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
ளார்:

நாரந்தனை செருக்கன் சந்தியில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் வயோதிப மாது ஒருவர் பலியானார். சிலர் காயமடைந்தனர்.

நாரந்தனைப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இரு பொம்மர்கள், திடீரென செருக்கன் சந்தியில் வடிசாலைக்கு அருகில் இரண்டு குண்டுகளை வீசின.

வீடு ஒன்றின் மீது குண்டுகள் விழுந்து வெடித்தன.

முதலாவது குண்டு வீசப்பட்டவுடன் வீட்டுக்குள் இருந்தவர்கள் வெளியே ஓடியதால் அடுத்த குண்டிற்கு சிக்காமல் மயிரிழையில் உயிர் தப்பினர்.

வெளியே செல்ல முடியாத நிலையில் வீட்டுக்குள் அகப்பட்டுக்கொண்ட வயோதிபர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

செல்வநாயகம் (வயது 70) என்பவரும் தங்கம்மா (வயது 69) என்ற பெண்ணுமே படுகாயமடைந்த நிலையில் வேலணை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வள்ளத்தில் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்படும் வழியில் அல்லைப்பிட்டியில் தங்கம்மா மரணமடைந்தார். மற்றையவரான செல்வநாயகம் நேற்றிரவு 10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். [உ-5]

### டில்லிக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
நான் தெரிவித்த இந்த கூற்றை வைத்து தமிழக அரசு மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எவரும் கருதி விடக் கூடாது என்றும் அந்தக் கூட்டத்தில் பிரதமர் பேசுகையில் குறிப்பிட்டார்.

இதேவேளை—
பிரதமர் சந்திரசேகர் லக்னோவில் வைத்து தெரிவித்த கூற்றை நேற்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி மறுத்தார்.

தேசியப் பிரச்சினைகளில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு தமிழக அரசு எப்போதுமே மத்திய அரசுடன் ஆலோசனை செய்து வந்துள்ளது என்று திரு. மு. கருணாநிதி செய்தியாளர்களிடம் கூறினார். [ஒ-எ]

# இன்று கூட்டம்

இன்று காலை 9.30 மணிக்கு நீர்வேலி தலைமைக் காரியாலயத்தில் நடக்கவிருக்கும் யாழ். மாவட்ட சிக்கன கடனுதவிக் கூ. ச. சமாஜத்தின் பொதுக் கூட்டத்தில் சங்கத்தின் வரவு செலவுத் திட்டம் குறித்தும் விவாதிக்கப்பட இருக்கிறது [ஒ]

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து கந்தசாமி

நாகமுத்து கந்தசாமி அவர்கள் காலமானார். அன்னார் ஸ்ரீலங்கா புத்தகசாலை உரிமையாளரும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜேந்திரன், யோகேந்திரன் (லண்டன்), சிவனேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரஞ்சினி, மங்கை (லண்டன்)யின் அன்பு மாமனாரும், பிரசன்னா, பிரவீனின் பேரனுமாவார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-12.90 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ராஜேந்திரன்

14, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (14853)

## திரு. S. T. நாகலிங்கம்

[ J. P., Retd. Optician]

திரு. S. T. நாகலிங்கம் J. P. 4 - 12 - 90 அன்று 2A, அத்தப்பத்து றோட், தெஹிவளையில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், மகேஸ்வரி ஜெயராசா செல்வலிங்கம், மகேஸ்வரன் [Retd. A. G., Nigeria] ஆகியோரின் தந்தையும்; திருமதி பிலிஸ் G. மகேஸ்வரனின் [மெல்போன்] மாமனாரும், காலஞ்சென்ற திருமதி செல்வம் கதிர்காமத்தம்பி, காலஞ்சென்ற திருமதி பாக்கியம் கந்தசாமி [மாத்தளை] ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஹரிதரன் [கட்டார்], பிறிந்தினி கணேஷ், முரளீதரன், கிறிஸ்ரோபர் [அவுஸ்திரேலியா], ஜெராட் [அவுஸ்திரேலியா] ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மேற்படி இல்லத்தில் நடைபெற்று கொழும்பு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இதை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி மகேஸ்வரி செல்வலிங்கம்.

[15141]

## திருமதி ஆச்சிப்பிள்ளை வேலுப்பிள்ளை

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி ஆச்சிப்பிள்ளை வேலுப்பிள்ளை காலமானார். அன்னார் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் தனபாலசிங்கம் [அதிபர், கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை), துரைசிங்கம் [வருமான வரித் திணைக்களம், யாழ்ப்பாணம்], வன்னியசிங்கம் [கிராம சேவை அலுவலர் மாவிட்டபுரம்], இராசேஸ்வரி, நாகராஜா, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புத்தாயும், மகேஸ்வரி, சிவசோதி [ஆசிரியை இராமநாதன் கல்லூரி], சிவபாக்கியலட்சுமிதேவி, கதிர்காமநாதன் [கூட்டுவில்லித் தோட்டம், அக்கரப்பத்தனை] சரஸ்வதி, சுவாமிநாதன் [நில அளவைத் திணைக்களம்] ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 14-12-1990 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு செம்மக்கட்டுவன் மூளாயில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள்.

செம்மக்கட்டுவன்,
மூளாய். (15146)

முல்லைத்தீவு மாவட்ட
இலங்கை வங்கி ஊழியர்களுக்கான

## அழைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முல்லைத்தீவு, மாங்குளம் இலங்கை வங்கிக் கிளைகளின் முகாமையாளர்களையும் மற்றும் சகல ஊழியர்களையும் 19-11-90 ஆம் திகதிக்குப் பிந்தாமல் வன்னிப் பிராந்தியக் காரியாலயத்தில் சமுகமளிக்குமாறு வன்னிப் பிராந்திய முகாமையாளர் கேட்டுக்கொள்கிறார்.

வவுனியா. வன்னிப் பிராந்திய முகாமையாளர்
(15163)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### சுகாதாரத் திணைக்களம்
### யாழ்ப்பாணம் பெரும்பாகம்

1991 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில்உள்ள அரசினர்வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி [20 - 12 - 1990] மு. ப. 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்கள் தெரிய விரும்புவோர் இக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர். ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், யாழ்ப்பாணம்,

சு. சே. பி. பணிமனை,
யாழ்ப்பாணம்,
10 - 12 - 1990. (ஐ/5520)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## திருடனே நீதிபதியாவதா?

இலங்கை முழுவதிலும் சுமார் மூவாயிரம் அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்குகின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் சில, நாட்டின் தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய வகையில் செயற்படுகின்றனவாம். வேறு சில, நாட்டில் இன, மத குழப்பங்களைத் தூண்டும் விதத்தில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனவாம். அரசுக்கு அவை குறித்துப் பலத்த சந்தேகம் ஏற்பட்டுவிட்டதாம். ஆதனால் சகல உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகள் குறித்தும் விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வாத நோக்கத்துடன் இயங்குகின்றன என்று சந்தேகப்படும் சில நிறுவனங்களை, சந்தேகத்துக்கு உண்மையான ஆதாரங்கள் உண்டு எனக் கண்டறியப்படும் பட்சத்தில், அவற்றின் செயற்பாடுகள் குறித்து விசாரிக்கலாம்; அதில் தப்பில்லை. ஆனால் சில திருடர்களைத் தண்டிப்பதற்காக எல்லோரையும் நீதிமன்றத்துக்கு இழுக்கும் ஏற்பாடு நேர்மையானவர்களையும் செயலிழக்கச் செய்யும் மறைமுகச் சூழ்ச்சியே.

அதுவும், வடக்கு கிழக்கில் யுத்தம் நடந்து, தமிழ் மக்கள் லட்சக்கணக்கில் பாதிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில்—

அரசாங்கம் பொருளாதாரத் தடை விதித்து தமிழ் மக்களின் தொண்டையைத் திருகிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில்—

தமிழ் மக்களின் மூச்சு விட அரச சார்பற்ற நிறுவனங்களே ஓரளவேனும் உதவி வரும் சமயத்தில்—

அவற்றின் கரங்களை ஒட்ட நறுக்கும் ஒரு செயலாகவே விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று கருதவேண்டியுள்ளது.

தமிழர்களுக்கு உதவும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது ஏதோ ஒரு கறையைப் பூசி, குற்றச்சாட்டுகளைச் சோடித்து அவற்றைச் செயல் இழக்கச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தமிழர்களுக்குக் கிடைக்கும் மனிதாபிமான உதவிகளையும் துண்டிக்க வேண்டும்.

இந்த முழு நோக்கத்துடனேயே ஆணைக்குழு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமானால், நாட்டில் இயல்பு நிலைமை இருக்கும் போதல்லவா விசாரணையும், தீர்ப்பும், தண்டனையும் செயலாக்கப்பட வேண்டும்?!

பாதிக்கப்படும் தமிழர்களுக்கு உதவும் பொருட்டும், வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்கெனவும் வெளிநாட்டு அரசாங்கங்கள், சர்வதேச நிதி நிறுவனங்கள் வழங்கும் பணத்தை அவர்களுக்கு எதிரான போருக்குச் செலவிடுகிறது அரசு. அத்தகைய அரசுக்கு, உண்மையான மனிதாபிமான சேவை புரியும் அரச சார்பற்ற நிறுவனங்களை விசாரிக்க என்ன யோக்கியதை உண்டு? திருடனையே நீதிபதியாக்கும் அடாத்து அன்றி, அது வேறென்ன?

# தடுப்பூசி ஏற்றும் வேலை பாதிப்பு

# வடக்கில் போலியோ அபாயம்

கொழும்பு, டிச. 16

1987 ஆம் ஆண்டு முதல் வடபகுதியில் குழந்தைகளுக்கான தடுப்பு ஊசிபோடும் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதிச் சிறுவர்களுக்கு போலியோ நோய் [சிறுபிள்ளைவாதம்] ஏற்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது கடந்த மாதத்தில் மட்டும் வடக்கில் 66 பேர் போலியோவால் பீடிக்கப்பட்டனர்.

இப்படிக் கூறுகிறார் சிரேஷ்ட தொற்று நோய்கள் தடுப்பு நிபுணர் டாக்டர் ரஞ்சன் டி. சில்வா.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கடந்த ஆண்டு நாடு முழுவதும் உள்ள அரச வைத்திய சாலைகளில் 25 லட்சம்பேர் சிகிச்சை பெற்றனர் என்றும் இவர்களில் 16 சதவீதமானோர் தொற்றுநோய்க்காகச் சிகிச்சை பெற்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## ஊறணி முதல் வாழைச்சேனை வரை

## 20 மைல்குடியிருப்புபகுதியில் மக்கள் எவரும் இல்லை

கொழும்பு, டிச. 16

மட்டக்களப்பு மாவட்டம், ஊறணியில் இருந்து வாழைச்சேனை வரையிலான 20 மைல் நீளமான குடியிருப்புப் பிரதேசங்களில் உள்ள கிராமங்களில் மக்கள் எவரும் தற்போது வசிப்பதில்லை.

இதன் காரணமாக இப்பிரதேசம் புதர்கள் வளர்ந்து காடு போல் காணப்படுகின்றது.

குறிப்பாக பிள்ளையாரடி, தன்னாமுனை, மயிலம்பாவெளி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, தளவாய், வந்தாறுமூலை ஆகிய பிரதேசங்களில் மக்களின் நடமாட்டமே இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சில வீடுகளை புதர்கள் வளர்ந்து மூடிவிட்டன என்றும் கூறப்படுகிறது. (உ-எ)

## 50 பரல் குளோரின் வந்தது

யாழ்ப்பாணம், டிச. 16

பருத்தித்துறைக்கு வந்த "லங்காசிறி" கப்பலில் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு 50 பரல் குளோரினும் எடுத்துவரப்பட்டுள்ளது.

பல தடவைகள் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் பின் — 1990 ஆம் ஆண்டில் — முதல் தடவையாக குளோரின் வடக்கே அனுப்பப்பட்டிருக்கிறது.

அகதி முகாம்களுக்கும் பொது இடங்களுக்கும் அவசியமாகத் தேவைப்படும் குளோரினை உடனடியாக இங்கு அனுப்பி வைக்காவிட்டால் இங்கு தொற்றுநோய் பரவும் ஆபத்து ஏற்படும் என வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. [உ-6]

## வடமராட்சி - தென்மராட்சி

## போதனா வைத்தியசாலை ஊழியருக்கு வாகன வசதி

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்கள் கடமைக்குச் செல்வதற்கு வசதியாக போக்குவரத்துச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

வைத்தியசாலை நிர்வாகத்தினரால் இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் போக்குவரத்துச் சேவைக்கு ஒவ்வொரு ஊழியரிடம் இருந்தும் போக்குவரத்துச் சேவைகள் சீராக அமைந்திருந்த காலத்தில் உள்ளவாறு, கட்டணம் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நோயாளர் அதிகரித்து வரும் இந்நேரத்தில் ஏற்படும் சேவைத் தடங்கல்களை நிவர்த்தி செய்யுமுகமாகவே இப் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

வலி. மேற்கு, வலி. வடக்கு பகுதிகளுக்கு ஏற்கனவே இப்படியான சேவை முழுவில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-15)

## அலையரசியும் கடற்படையிடம்

நெடுந்தீவு, டிச. 16

ஊர்காவற்றுறை அனலைதீவுச் சேவையில உள்ள அரச படகு அலையரசியும் இப்போது கடற்படையினரின் வசமாகியுள்ளது. இப் படகு தற்போது நயினாதீவில் நிறுத்தப்பட்டுள்ளது. (அ-111)

## நகரப் பகுதியில் விறகு சேகரிப்போர்

குருநகர், டிச. 16

யாழ் கோட்டை, பொது சன நூலகம், சுப்பிரமணியம் பூங்கா, மாவட்டமன்று, யாழ். மாநகரசபைக்கட்டடம், தொல்பொருள் காட்சிச்சாலை, வாடிவீடு, கிட்டங்கிப் பகுதிகளில் தினமும் நூற்றுக்கும் மேற்பட்டோர் விறகு சேகரிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

விறகு சேகரிப்பதில் ஈடுபட்டிருப்போர் பெறுமதி வாய்ந்த மரங்கள், பலகைகள் போன்றவற்றையும் கொத்தி, வெட்டி எடுத்து செல்கின்றனர்.

இதே சமயம் அப்பகுதிகளில் அரச, கூட்டுத்தாபன அலுவலகங்களிலும் தனியாருக்குச்சொந்தமான கட்டடங்களிலும் ஓடுகள், மரங்கள் கழற்றப்பட்டு விற்பனைக்காக விஷமிகளால் எடுத்துச் செல்லப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது. [இ-51]

## நேர்முக பரீட்சைக்கான அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், டிச. 16

வடமராட்சிக் கோட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்கு தெரிவாகியுள்ள தொண்டர் ஆசிரியர்கள், வசதிக்கட்டண ஆசிரியர்கள் அனைவரும், தமது அனுமதி அட்டைகளை நாளை மறுதினம் 18 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு, மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில், கோட்டக்கல்வி அதிகாரி திரு பொ.வீரபத்திரனை சந்தித்து பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அனுமதி அட்டை பெற வரும்போது அடையாள அட்டையையும் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-6)

# பாதிக்கப்பட்ட இருநூறு பேருக்கு இம்மாதம் காசோலை

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ்ப்பாணமாவட்டத்தில கடுமையாகப் பாதிப்புற்றோர் நிவாரணத்திட்டத்தின் கீழ் 200 பேருக்கு இம்மாதத்தில் காசோலைகள் வழங்கப்படவிருக்கின்றன.

1983 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால மரணமானோர், காயத்துக்குள்ளானோருக்கான நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் நவம்பர் மாதத்தில் 217 பேருக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.

ஆனால் கடந்த ஜூன் மாதம் முதல் மேற்சொன்ன கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

புனர்வாழ்வுப் பிரிவில் தேங்கிக் கிடக்கும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவதாகவும், தொடர்ந்து மற்றவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும் என்றும் அந்தப் பிரிவின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

எனினும் இவ்வருடம் ஜூன் மாதத்துக்குப் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைகள் எதுவும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார். [அ-3]

## இறங்குதுறை திருத்தவேலை

பருத்தித்துறை, டிச, 16

பருத்தித்துறை இறங்குதுறையின் திருத்த வேலைகளை யாழ் - செயலக புனர்வாழ்வுப் பிரிவு மேற்கொள்ள இருக்கிறது.

தற்காலிகமாக துறைமுகத்தின் இருமருங்கிலும் மண் மூடைகள் அடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் பாதுகாப்பரண்கள் போல் பனைமரங்களும் கட்டப்பட்டுள்ளன. இத்திருத்த வேலைகளை அடுத்து துரிதமாகப் பொருள்களை இறக்கும் வேலைகள் நடைபெறுகின்றன.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் அனுசரணையுடன் இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இறங்குதுறை சேதம் அடைந்ததால் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகளில் தடங்கல் ஏற்படும் ஆபத்து இருந்து வந்தது தெரிந்ததே. (இ-118)

## மருத்துவ பீட மாணவர் வரவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மாணவர் வரவு அதிகரித்திருக்கிறது.

முன்னர் 45 சதவீதமாக இருந்த மாணவர் வரவு தற்போது 70 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## காசோலை 6 மாதம்

கொழும்பு, டிச.16

அரசாங்கக் காசோலைகளில் செல்லுபடிக் காலம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆறு மாதங்களாக நீடிக்கப்பட்டுள்ளது. (இ-...)

## மாணவருக்கான வரவேற்புக் கூட்டம்

யாழ.பல்கலைக்கழக முதலாம் வருட, கலைப்பீட மாணவர்களுக்கான வரவேற்புக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில், கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். இதனை 2 ஆம் வருடக் கலைப்பீட மாணவர்கள் ஒழுங்கு செய்துள்ளனர். [அ-6]

## சென். பற்றிக்ஸ் உப அதிபர் வெள்ளிவிழா

யாழ்ப்பாணம், டிச. 16

சென். பற்றிக்ஸ் கல்லூரி உப அதிபர் வண பிதா பியேசுநேசனின் வெள்ளிவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

சென். மேரிஸ் கதீற்றல் தேவாலயத்தில் பூசையும் கல்லூரியின் மதுரம் சதுக்கத்தில் வெள்ளி விழா நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன. (இ)

## மன்னார் அரச ஊழியர் விடுதியில் பொலீஸார்

மன்னார் நகரப்பகுதியில் உள்ள அரச ஊழியர் விடுதிகளில் பொலீஸார் தங்கியுள்ளனர்.

300க்கு மேற்பட்ட பொலீஸார் அந்த விடுதிகளில் தங்கியுள்ளதால் அரச ஊழியர்கள் தங்க இடமின்றிக் கஷ்டம் அடைகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## உலகச் செய்திகள்

### கோவாவில் ஜனாதிபதி ஆட்சி

பனாஜி, டிச. 16

கோவா மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் டாக்டர் பார்போஸ் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து ஸ்திரமான மாநில அரசு ஒன்றை அமைக்க முடியாத நிலை அங்கு சில தினங்களாக நிலவியது.

அதனைத் தொடர்ந்து மாநில ஆளுநர் குர்ஷித் ஆலம்கான் செய்த சிபார்சைத் தொடர்ந்து, ஜனாதிபதி அங்கு ஆளுநர் ஆட்சியை வெள்ளிக்கிழமை நள்ளிரவு கொண்டு வந்தார். (இ-எ)

### சோவியத் மாநிலங்களுக்கு கட்டுப்பாடு

மஸ்கோ, டிச.16

சோவியத் மத்திய அரசின் பொருளாதார கொள்கைக்கு முரணாக மாநிலக் குடியரசுகள் சொந்த பொருளாதாரக் கொள்கைகளை அமுலாக்க முடியாது.

இப்படி கூறும் உத்தரவு ஒன்றை ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் நேற்றுப் பிறப்பித்தார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவு சோவியத் டெலிவிஷனில் வாசிக்கப்பட்டது. (இ-எ)

### இணை அமைச்சர் நாளை சென்னை வருகிறார்

சென்னை, டிச. 16

இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத் கோன்சஹாய் நாளை திங்கட்கிழமை சென்னைக்கு விஜயம் செய்கிறார்.

தமிழ்நாடு மாநில அரசு அதிகாரிகளுடன் அவர் சட்டம், ஒழுங்குப்பிரச்சினைகள் பற்றி விசாரிப்பார்.

முதலமைச்சர் கருணாநிதியை அவர் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-எ)

### பொருளாதார தடை பற்றி ஒலிவர் றம்போ

கேப் வுண், டிச. 16

தென் ஆபிரிக்க அரசு மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்குவது பற்றி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மீளாய்வு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

30 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் அஞ்ஞாத வாசம் செய்து விட்டு கடந்த வியாழன் தாயகம் திரும்பிய காங்கிரஸ் தலைவர் ஒலிவர் றம்போ இந்த வேண்டுகோளை நேற்று முன்தினம் நடந்த காங்கிரஸ் வருடாந்தமாநாட்டில் விடுத்தார். (இ-எ)

### இந்து - முஸ்லிம் கலவரம்

ஆந்திரா மாநிலம், ஹைதரபாத் நகரில் தொடர்ந்து இடம் பெறும் இந்து-முஸ்லிம் கலவரங்களில் வெள்ளிக்கிழமை மட்டும் குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளனர்; இதுவரை இக்கலவரத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 175 ஆக அதிகரித்துள்ளது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழி வெள்ளடியன் பெண்டம் விளக்கிய சுத்தமான ஸ்பெசல் நல்லெண்ணை ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு:- வி.எம். பாக்கியநாதன், சாந்தன் வீதி (கலட்டி லேன்), கோண்டாவில் மேற்கு கோண்டாவில்- [14852]

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்," இல. 256 A, பருத்தித்துறை வீதி நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை யாழ்ப்பாணம். (15000)

இரசாயனவியல் இறுதிப் பகுதிகளை உள்ளடக்கிய A. மகாதேவனின் 'புவிவளம்' நூல் மற்றும் அசேதன இரசாயனம், பௌதிக இரசாயனம் ஆகியவை எம்மிடம் பெறலாம். மண்டேலா றேடர்ஸ், நல்லூர். [15132]

### மணமக்கள் தேவை

யாழ் இந்து மதத்தைச் சேர்ந்த பெற்றோர் 38 வயது பூரம் நட்சத்திரம் பயிற்றப்பட்ட கணித ஆசிரியை மகளுக்கும், 36 வயது பரணி நட்சத்திரம் கணக்காளர் மகனுக்கும் மணமக்கள் தேடுகிறார்கள். மாற்றுச் சம்பத்தமும் செய்யலாம். தொடர்பு: ந. தேவராசன், 'துவாரகை' துன்னாலை தெற்கு, கரவெட்டி. [14908]

### சேவை

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: அருண் மாக்கட்டிங் அன் சேவிஸஸ், 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5516)

### அம்பாள் திருமண சேவை

உங்கள் பிள்ளைகளின் ஜாதகக் குறிப்பை நேரிலோ அல்லது கடிதமூலமாகவோ அனுப்பி வைத்தால் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் திருமண ஒழுங்குகள் செய்து தரப்படும். முழு விபரங்களையும் அனுப்பி வைக்கவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகம், வீரமாகாளி அம்மன் கோவிலடி, யாழ்ப்பாணம். (14699)

### இடமாற்றம்

நாயன்மார்கட்டு முறிவு, நெரிவு வைத்தியசாலையின் பரம்பரையில் தோன்றியவரும், பட்டதாரியும், அவ் வைத்தியசாலையில் சிரேஷ்ட வைத்தியராகவும், லங்கா ஆயுள்வேதக் கல்லூரியின் முன்னைநாள் விரிவுரையாளருமாகப் பணிபுரிந்த டாக்டர் ஸ்ரீ ஜெயதேவி அவர்கள் 455 ஏ, கே.கே.எஸ். வீதியில் இருந்து 179, நாவலர் வீதிக்கு வைத்தியசாலையை இடம் மாற்றியுள்ளார். [15128]

### சன்லைட் றைக்கிளீனர்ஸ்

யாழ்நகரில் தமது வழமையான சேவைகளை ஆரம்பித்துள்ளனர் என்பதனை அறியத்தருகின்றனர். 23, பஸ் நிலையம் யாழ்ப்பாணம். C/5539

### சோதிடம்

Astrologer and Palmist வெளிநாட்டுச் சாதகங்கள் எழுதவும், உயர்கல்வித்துறை தொழில், காதல் கல்யாணம், திக்குத்திசை, செவ்வாய், தோசநிவர்த்தி, விதிக்கமைய திருமணப் பொருத்தம் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்க்கமான ஆலோசனைக்கு நாடுங்கள் இராசேந்திரன் 'திருவுளம்' ரவிராஜ் வீதி, ஆடியபாதம் றோட். கொக்குவில் கிழக்கு. [15138]

### தவறிவிட்டது

இரண்டு சேலைகளும், கைக்கடிகாரம் ஒன்றும் 11 ம் திகதி மதவாச்சியிலிருந்து வவுனியா வந்த வானில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 66/2, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தயவுசெய்து அறியத்தரவும். (15136)

## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



## அமரர் கார்த்திகேசு இராசரத்தினம்

(செல்லையா)
(Retired Shroff, Customs, -Colombo)

மலர்வு:
27 - 1 - 1899

உதிர்வு:
16 - 11 - 1990

அவர்களின் வீட்டுக் கிருத்திய வைபவம் [16-12-90] அன்னாரின் இல்லத்தில் (அச்சுவேலி) நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் சமூகம் தந்து மதிய போசனத்தில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
179/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [15134]

## 1991ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

எனது 24/11/90ம் திகதிய கேள்வி அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

'வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் மானிப்பாய் பட்டினம்/மானிப்பாய் கிராமம்/பண்டத்தரிப்பு பட்டினம்/பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக் கடைகள் ஆகியவற்றிற்கான சீல் வைத்த கேள்விகள் என்னால் 24/12/1990ம் திகதி நண்பகல் 12.00மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 21-12-1990 நண்பகல் 12.00மணி வரை விநியோகிக்கப்படும்.'

இ. இராமலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலி தென்மேற்கு பிரதேசசபை.

தலைமை அலுவலகம்.
வலி தென்மேற்கு பிரதேசசபை,
நகரமண்டபம்,
மானிப்பாய்.
13-12-90 (சி/5537)

## முதலாம் வருட ஞாபகார்த்தம்



மலர்வு:-
2 - 9 - 1957

உதிர்வு:-
28 - 12 - 1989

### செல்வி காளிராசா சாந்தகுமாரி (B.A)

(சாந்தி)
(ஆசிரியை, முரசுமோட்டை முருகானந்தா மகா வி)

செல்வமே!
சாந்தமான உனது முகமும்
சாந்தியான உனது பெயரும்
பாசமாய் எம்மை அணைத்திடும் குணமும்
நெஞ்சினை விட்டு நீங்கவே மாட்டாதம்மா

உமது பிரிவால் வாடும்
அம்மா, சகோதரர், உறவினர்.
மீசாலை வடக்கு, கொடிகாமம். [15130]

## 91 ஆம் நாள் நினைவஞ்சலி

அந்தியேட்டி அழைப்பும், வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவிலலும்

### சிவசுப்பிரமணியம் மகேந்திரதாஸ்

(சோதி)
(வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி - மாணவன்)



பிறப்பு: 03-02-1969
அழிப்பு: 18-09-1990

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுத் திடீரென மறைந்து விட்ட எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக்கிருத்தியம் நாளை 17-12-1990 காலை நடைபெறுமென்பதை அறியத் தருகின்றோம். 1990 - 09 - 19 அன்று வடக்கு அராலியில் நடந்த அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து உதவிய வடக்கு அராலி மக்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையும் வண்ணம் பிரார்த்திக்கும்:

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.
வடக்கு அராலி. [15139]

## இப்பொழுது நடைபெறுகின்றன

## A/L 90, 91, 92

| | | |
|---|---|---|
| CHEMISTRY | — | திரு. மகாதேவா |
| PHYSICS | — | திரு. கணேசன் |
| BOTANY | — | திரு. ஸ்ரீகரன் |
| ZOOLOGY | — | திரு. கெங்காதரன் |
| PURE MATHS / APP MATHS | } | திரு. மகேஸ்வரன் |

## BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(15137)

## 3 ஆவது நினைவஞ்சலி

தோற்றம்:
16 - 8 - 86



மறைவு:
16 - 12 - 87

### சொர்ணலிங்கம் டினேஷ்குமார்

(குட்டிக்கண்ணா)

எம் குலவிளக்காய் வந்துதித்து நிலவாக ஒளி தந்து உவகையுடன் வாழவைத்தாய். சிலகாலம் வாழ்ந்திருந்து சிறகடித்து சென்று விட்டாய். நீ தேய்ந்து மறைந்தின்று மூன்றாண்டு ஆகிடினும் நீ தந்த மழலை மொழி என்றென்றும் கேட்குதய்யா. நீயில்லை ஆனாலும் உன் உயிரிங்கே நிலைத்திருக்க இறையருளை வேண்டுகின்றேம்.

ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்:

தாய், தந்தை, சகோதரிகள், அச்சாப்பா, அச்சாம்மா (சதாசிவம் குடும்பத்தினர்), அப்பப்பா, அப்பம்மா [கண்டி-கனகரத்தினம் குடும்பத்தினர்), மாமா, மாமி பெரியப்பா, பெரியம்மா, மற்றும் உறவினர்கள்.

சந்தை மேற்கு ஒழுங்கை,
மானிப்பாய். [சி/5534]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும்



ஜனனம்:
14-03-1968

வீர மரணம்:
03-11-1990

03-11-90 அன்று மாவிட்டபுரம் மினிமுகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த

### ● லெப். காஞ்சனா ●

சரோஜினி கணபதிப்பிள்ளை
(யா/ வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி பழைய மாணவி)

எமதன்பு மகளின் அந்தியேட்டிக் கிரியைகள் 17-12-90 அன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர் நண்பர்கள், இயக்கத் தோழர்கள், தோழிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

தூந்தி வீதி,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (15140)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org